BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகர குடியிருப்புவாசிகள், வணிகர்கள் மற்றும் சமுதாயக்குழுக்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் நகர நிர்வாகம் பயனாளி கட்டணங்களில் மாற்றங்களுக்கு ஒப்புதல் அளிக்கிறது.

ப்ராம்ப்ட்டன், ON (மே 29, 2020) – சமுதாயத்தில் கோவிட்-19 தொற்றுப் பரவல் பாதிப்பு காரணமாக ஏற்பட்ட நிதிரீதியான பாதிப்புக்களைக் குறைப்பதில் உதவுமுகமாக ப்ராம்ப்ட்டன் நகர் மன்றம் இந்த வாரத்தில் தமது பயனாளி கட்டணத்தில் மாற்றங்களுக்கு ஒப்புதல் அளித்தார்கள்.

புதன்கிழமையன்று நிகழ்ந்த நகர்மன்றக் கூழு கூட்டத்தில், 2020 ஆம் ஆண்டுக்கான குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பயனாளி கட்டணங்கள் பலவற்றையும் 2019 ஆம் ஆண்டு கட்டண விகிதத்திற்கே திருப்பி அமைக்க மன்றம் ஒப்புதல் அளித்தது; இது பொழுதுபோக்கு, நிகழ்த்து கலைகள், வசதியமைப்பு கட்டிட சேவைகள், தீ தடுப்பு மற்றும் அவசரகால சேவைகள், சட்டவடிவாக்கல் சேவைகள் மற்றும் பூங்காக்கள் மற்றும் காடு வளர்ப்பு ஆகிய பகுதிகளுக்கு பொருந்தும். இந்த மாற்றங்கள் ஜூலை1, 2020 முதல் அமலுக்கு வரும், மற்றும் இதனால் இந்த ஆண்டு இறுதி வாக்கில் $1,021,000 மதிப்புக்கு நிவாரணம் கிடைக்கும்.

நகர நிர்வாகம் குடியிருப்பு வாசிகளுக்கு எண்ணற்ற திட்டங்கள் மற்றும் சேவைகளை வழங்க கடமை கொண்டிருக்கிறது; இவையனைத்தும் எளிதில் அணுகக்கூடியவை என்பதுடன் கொடுக்கும் பணத்திற்கான மதிப்பை வழங்குகின்றன. பயனாளி கட்டணங்கள் மூலம் நகர நிர்வாகம் தனது செலவுகளை மீட்டுக்கொள்ள உதவும்; அதே வேளையில், சொத்து வரி விகிதத்தின் சுமையையும் குறைக்கிறது.

இந்த மாற்றங்கள் யாவும், பிராந்திய கவுன்சிலர் மார்ட்டின் மெடெய்ரோஸ் தலைமையிலான மேயரின் ”மறு திறப்பு மற்றும் மீட்பு பணிக்குழுவால்” மேற்கொள்ளப்பட்டு, அதில் பொது மக்கள் ஈடுபாட்டின் மூலம் பெறப்பட்ட பின்னூட்டத்தின் உடனடி விளைவாகும். இன்றைய தேதிக்கு, 3,900 க்கும் மேற்பட்ட தனிநபர்கள் மற்றும் குழுக்கள் நகரத்தின் ஆன்லைன் கருத்தாய்வு மற்றும் தற்போதைய பங்குதாரர் சந்திப்புகள் மூலம் பின்னூட்டக்கருத்துக்களை வழங்கியுள்ளனர்.

நகரத்தின் ஆன்லைன் மீட்பு மற்றும் மறுதிறப்புக்கான கருத்தாய்வு ஜூன் 14, 2020 வரை திறந்தே இருக்கும்; ஒரு வழியாக நகரத்தை அதன் செயல்பாட்டுக்கு மீண்டும் திறந்துவிடுவதற்கான நகர நிர்வாகத்தின் திட்டங்களைப் பற்றி குடியிருப்பாளர்கள் மற்றும் வணிகர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க அழைக்கப்படுகிறார்கள்.

மேலும் தகவல்களுக்கு, வருகை தரவும் www.brampton.ca/COVID19.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ கோவிட்-19 (COVID-19) தொற்று பரவல் காலம் முழுவதுமாக, எங்கள் நகர் மன்றமானது ஆன்லைன் மற்றும் தொலைபேசி டவுன் ஹால் மூலம் நமது சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுடனும் தொடர்ந்து ஈடுபாடு காட்டி வருகிறது. கோவிட்-19 (COVID-19) தொற்று பரவலானது, நிதிரீதியான பெரும் நஷ்டத்தை உண்டாக்கிவிட்டதாக பல்லாயிரக்கணக்கான மக்களிடமிருந்து எங்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது; இந்த வாரத்தில் எடுக்கப்பட்ட இந்த முடிவானது, நாம் அனைவரும் கூட்டாக மீள்வதற்கு ஆதரவளிப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டை நிரூபிக்கிறது.”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்டன் நகரம்*

“ மேயரின் மறு திறப்பு மற்றும் மீட்புக் குழு தொடங்கப்பட்டதிலிருந்து, நாங்கள் எங்கள் பாதையை முன்னோக்கித் திட்டமிடும்போது அதில் மிக முக்கிய பங்கு வகிப்பது என்ன என்பதை எங்கள் குடியிருப்புவாசிகள், வணிகங்கள் மற்றும் பங்குதாரர் குழுக்கள் ஆகியோர் எங்களிடம் கூறியிருக்கிறார்கள். நமது சமூகத்தால் வடிவமைக்கப்பட்ட ஒரு திட்டத்தை உருவாக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம், இந்த அர்த்தமுள்ள பின்னூட்டத்திற்கு நாங்கள் தொடர்ந்து செவிசாய்த்து, அதன்படி நடவடிக்கை எடுப்போம்.”

*- மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; அணித்தலைவர், மேயரின் மறுதிறப்பு மற்றும் மீட்புப் பணிக்குழு*

“ நகர நிர்வாகம் படிப்படியாக நகரை மீண்டும் திறக்கத் திட்டமிடுவதால், அந்தச் செயலில் நமது சமூகம் தொடர்ந்து ஈடுபாடு காட்டி, இந்த முக்கியமான கலந்துரையாடல்களில் தொடர்ந்து பங்கேற்பது என்பது மிகவும் முக்கியமானதாகும். இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஆன்லைன் கருத்தாய்வில் தங்கள் கருத்துக்களைக் கூற, அனைத்து குடியிருப்பாளர்களும் பங்கேற்குமாறு நான் ஊக்குவிக்கிறேன்; நமது சமூகத்தின் தேவைகளை நகர நிர்வாகத்தின் அடுத்த செயல்படிகள் சிறப்பாக பிரதிபலிப்பதை இது உறுதிப்படுத்தும்.”

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்டன் நகரம்*

-30-

கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள்

சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca